ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தொல்காப்பியரின் உவமைச் சிந்தனை : மரபும் வழக்காறும்

முனைவர் ந. அருள்மொழி
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியரின் உவமைச் சிந்தனை சமூகப் பண்பாட்டு அழகியல் உணர்வு சார்ந்தது. தொல்காப்பியர் காலம் தொட்டே இன்றும் மரபு, வழக்காறு என இருநிலைகளில் உவமைகள் இயங்கியல் தன்மை பெற்றுள்ளன. தொல்காப்பியரின் உவமை குறித்த கருத்தாக்கச் சிந்தனைகளை சமூகம் சார் உவம மரபுகள், சமூகம் சார் வழக்காறுகள், பண்பாடு சார் உவம மரபுகள், அழகியல் சார் உவம மரபுகள், அழகியல் சார் வழக்காறுகள் போன்ற தன்மைகளில் ஆய்ந்து காண ஆய்வு இடம் தருகின்றது. உயர்திணை அல்லது அஃறிணை சார்ந்த செயல்பாடுகள், பயன்நிறை ஆக்கங்கள், உருவத் தோற்றங்கள், நிற அடையாளங்கள் மற்றும் அகம் சார் சமூக மனநிலை வெளிப்பாடுகளைச் சமூகம் சார் உவம மரபுகளாக ஏற்க இயல்கின்றது. உயர்ந்த பொருளுக்கு உயர் தன்மையில் உவமை கூறவேண்டும் எனும் பண்பாட்டு மரபினைக் கட்டுடைத்து இழிவான ஒன்றையும் ஒப்பீடாக்கலாம் எனும் கருத்தாக்க மீறலை சமூகம் சார் வழக்காறாகக் கருத முடிகின்றது. மெய்ப்பாட்டுத் தன்மையோடு புலன்களுக்கு இன்பம் தரும் உவமச் சிந்தனைகளை அழகியலாக நோக்கிக் காணமுடிகின்றது. தொல்காப்பியர் கால உவமைச் சிந்தனை காலம் கடந்தும் இலக்கியப் பயன்பாடு, வழக்கியல் பயன்பாடு என இருநிலை நோக்கிலும் சமூகப் பண்பாட்டுத் தாக்கத்திற்கு உள்ளாகி அழகியல் உணர்வோடு வெளிப்படுவதை இக்காலச் சான்றுகளோடு ஆய்வுக் கட்டுரை நிறுவுகின்றது.

## முன்னுரை

தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்தில் உவமை குறித்த சிந்தனைகள் பதிவு பெற்றுள்ளன. இவ் உவமைச் சிந்தனைகள் மரபு நிலையிலும் அமைந்துள்ளன; வழக்காற்றுத் தன்மைகளையும் ஏற்றுள்ளன. பன்னெடுங்கால உவம மரபு, வழக்குப் பயன்பாடு ஆகியவற்றைத் தாங்கிய உவமைகள் இன்றும் மரபுத் தன்மைகளோடும் வழக்காற்றுத் தன்மைகளோடும் பயன்பாட்டில் இருப்பதைக் காணமுடிகின்றது. புதிய உவம உருபுகள் (போல என்பதற்குப் பதில் மாதிரி) தோன்றியுள்ளனவே தவிர உவமை குறித்த கருத்தாக்கம் பன்னெடுங்கால மரபிலேயே இன்றும் தொடர்கின்றது. சமூக, பண்பாட்டு, அழகியல் உணர்வுத் தாக்கம் குறித்த சிந்தனைகளின் பதிவாகத் தொல்காப்பிய உவமையியல் அமைந்துள்ளது எனும் கருதுகோளினை மையமாகக் கொண்டு இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## சமூகம் சார் உவம மரபுகள்

முன்னோர் நெறிமுறைகளைப் பின்பற்றிச் சமூக மரபில் காணப்பட்ட உவமைகளைச் சுட்டும் நோக்கில் சமூகம் சார் உவம மரபுகளைக் கருதமுடிகின்றது. ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பேசும் மரபு நம்மிடம் உள்ளது. அவன் தாத்தாவைப் போல இருக்கிறான் ; அவள் அம்மாவை உரித்து வைத்தது போல இருக்கிறாள் ; கிளி போலக் கொஞ்சிப் பேசுகிறாள் ; என்னிடமும் இதே போல் சேலை உள்ளது ; எங்கள் ஊரும் இது போல் பசுமையாக இருக்கும் ; அப்பா போல அவனுக்கும் கோபம் வரும் போன்ற உவமைகளைத் தமிழ் மாந்தர் இன்றும்

இயல்பாகப் பேசி வருகின்றனர். இவ்உவமைகள் இலக்கியத்திலும் இயல்பான வழக்கிலும் நம்மோடு பல்லாண்டுகளாகப் பயணித்து வருகின்றன.

சச்சின் போல (மாதிரி) விளையாடுகிறான் – செயல் (வினை உவமை)

மரம் போல பலருக்கும் பயன்பட்ட மனிதர் – பயன் உவமை

பால் போல வெண்மை – உரு உவமை (வண்ணம், குணம், சுவை)

தாமரை பேன்ற முகம் – மெய் உவமை (வடிவம்)

தொல்காப்பியம் உவமையை செயல், பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் எனக் கூறியுள்ளது. இன்றும் இம்மரபே தொடர்கின்றது.

"வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்" (தொல். உவமையியல், 299)

வினை என்பது செயல்பாடு. பயன் என்பது செயல்பாட்டின் காரணமாக அமையும் பயன்பாடு. மெய் என்பது முதல் (முழுத்தோற்றம்), சினை (உறுப்பு) போன்றவற்றின் வழி அறியப்படும் ஒரு பொருளின் வடிவம், உரு என்பது ஒரு பொருளின் நிறம், பண்பு, சுவை போன்ற பண்புகள். சமூக மக்களின் மனநிலை சார்ந்த வெளிப்பாட்டினை இவ் உவம மரபு முன்னிறுத்துவதாக உணர முடிகின்றது.

முதல் பொருளுக்கு முதல் பொருளையும், சினைக்கு (உறுப்பு) சினையையும் உவமையாகக் கூற வேண்டும். அதே போல் முதல்பொருளுக்கு சினையையும், சினைக்கு முதற்பொருளையும் ஒப்புமைப்படுத்தலாம் என்கிறது தொல்காப்பியம். முதற்பொருள் என்பது மனிதன், மரம், வானம், சுளகு, வீடு, அலைபேசி, கணினி. தொலைகாட்சி போன்றவை. சினை என்பது மூக்கு, கண், காது, கிளை, பூ, வரவேற்பு அறை, சுட்டெலி, திரை போன்றவை.

"முதலும் சினையும் ஆயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய" (தொல்.உவமையியல்,278)

'மரபின் உரியவை உரிய' என்ற தொடர் மரபிலிருந்து மாறாமல் உவமை கூற வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

யானை போன்ற மனிதன் - முதலுக்கு முதல்

விரல் போல் மரக்கிளை – சினை சினை

மீன் போல் கண் - முதலுக்கு சினை

பூப் போல் குழந்தை – சினைக்கு முதல்

இன்றும் இச்சான்றுகளை நாம் பயன்படுத்துகின்றோம். முதலுக்கு முதல், சினைக்கு சினை போன்ற இலக்கணமரபு நமக்குத் தெரிகிறதோ இல்லையோ உவமைகளைப் பயன்படுத்த நாம் தவறுவதில்லை. தொல்காப்பியம் 'தடுமாறு உவமம்' என்றொரு வகையைக் குறிப்பிடுகின்றது. இதனை 'ஐய உவமை' என்றும் கூறுவர். இவ் உவமை அகம்சார் சமூக மரபைத் தோற்றப்படுத்துகின்றது. களவுக் கால சமூக மனநிலையைப் பிரதிபலிக்கின்றது.

"தடுமாறு உவமம் கடிவரை இன்றே" (தொல். உவமையியல்,1256)

இத்தடுமாறு உவமையை உவமையாக ஏற்க வேண்டும் என்கிறது தொல்காப்பியம். தமிழண்ணல் "வண்டு, கண் போல் மலர்ந்த பூவையும் பூப்போல் மலர்ந்த கண்ணையும் தெளியாது எதில் மொய்ப்பது எனத் திகைக்கும் என்பது ஐய உவமை" (2021:438) என்கிறார்.

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம் இம்மூன்றும் உடைத்து" (குறள்.1088)

தலைவன் தலைவயின் பார்வை (நோக்கம்) கண்டு திகை;கின்றான். இதென்ன எமனோ (கூறற்மோ) கண்ணோ பெண்மானோ (பிணையோ) எனத் தலைவி பார்வை கண்டு ஐயம் அடைவதாக வள்ளுவர் படைத்துக் காட்டுகின்றார். அகமரபுசார் நிலையில் இச்சான்றினை நோக்கமுடிகின்றது. தலைவன் மனஉணர்வு இயல்பான உளத்தன்மை நோக்கில் அமைவதையும் ஆய்வு புலப்படுத்துகின்றது.

சமூகம்சார் உவம வழக்காறுகள்

மரபுகளிலிருந்து மீறும் அல்லது மாறும் உவமை குறித்த கருத்தாக்கச் சிந்தனைகளை சமூகம் சார்ந்த உவம வழக்காறுகளாகக் கருதமுடிகின்றது. எப்பொழுதும் எந்த ஒரு செயல்பாட்டிற்கும் இரட்டைத் தன்மை இருக்கும். நன்மை இருப்பின் தீமையும் இருக்கும், உயர்வு இருப்பின் தாழ்வு இருக்கும். அழகு இருப்பின், அழகின்மை என்றொன்றும் இருக்கும்.

இதைப் போன்றே உவமை கூறும் பொழுது சிறப்பானதையும் உயர்ந்ததையும் கொண்டு உவமை கூறவேண்டும் எனக் கூறும் தொல்காப்பியம் ஒன்றன் இழிவைப் புலப்படுத்தவும் உவம வழக்குள்ளதாகச் சுட்டுகின்றது.

*“கிழக்கிடு பொருளோடு ஐந்தும் ஆகும்” (தொல். உவமையியல், 1226)*

(கிழக்கிடு பொருள் - கீழான பொருள்)

சிறப்பு, நலன், வலி, காதல் ஆகிய நான்கோடு ஒன்றை இழிவுபடுத்தவும் வரும் உவமையைச் சேர்த்து உவமை ஐந்து நிலைகளில் அமையுமாம். எருமை போல இடிக்கிறான், காக்கைப் போல பாடுகிறாள், குரங்கு போலக் குதித்துப் போகிறான், இராட்சசி போலக் கத்துகிறாள், யானை போல சிவப்பு, நாய் போல குறைக்கிறான், நரி போல ஊளையிடுகிறான் போன்ற வழக்காற்றுச் சான்றுகள் இழிவைப் புலப்படுத்துகின்றன.

பண்பாட்டு உவம மரபுகள்

உவமையைப் பண்பட்ட நிலையில் உயர்பொருள் மீது படைக்க வேண்டும் எனும் கருத்தாக்கத்தைப் பண்பாட்டு உவம மரபாகக் கருதமுடிகின்றது. உவமையை வினை, பயன், மெய், உரு போன்ற அடிப்படையில் கூறினாலும் அவை சிறந்த தன்மையில் அமைதல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். உயர்ந்த பொருள் மேல் உவமை கூறும் தன்மையே உயர்ந்தது என எண்ணும் தொல்காப்பியரின் பண்பாட்டுச் சிந்தனையாக இதனை நோக்கமுடிகின்றது.

*“உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை” (தொல்.உவமையியல், 1224)*

புலி போலப் பாய்ந்தான் எனக் கூறலாம் ; எலி போலப் பாய்ந்தான் எனக் கூறுவது தவறாகும். ஆலமரம் போல வாழ்க எனக் கூறலாம் ; எருக்கு போல வாழ்க எனக் கூறுவது தவறாகும். தமிழர்தம் பண்பட்ட மனஉணர்வின் வெளிப்பாடாகவே இத்தொல்காப்பிய நூற்பாவை எண்ணமுடிகின்றது. ஒன்றைச் சிறப்பிக்க உவமை கூறலாம் ; ஒன்றன் அழகை, பண்பை வெளிப்படுத்த உவமை கூறலாம் ; ஒன்றன் அன்பு, பாசத்தை விளக்க உவமை கூறலாம். ஒன்றன் சொல் வலிமையைச் சுட்ட உவமை கூறலாம். தொல்காப்பியர் தமிழரின் சமூக, பண்பாட்டு மன உணர்வை உற்றுநோக்கியே எழுதியுள்ளார் என இந்நூற்பாவை நோக்க முடிகின்றது.

*“சிறப்பே நலனே காதல் வலியோடு*
*ஆற்நாற் பண்பும் நிலைக்களம் என்ப” (தொல். உவமையியல்,1225)*

சிறப்பு - காந்தி போல வாழ்ந்தார்
நலன் - ஓவியம் போல ஒப்பனை
காதல் - குயில் போல பாடினாள்
வலி – சிறுத்தை போலச் சீறினான்

இச்சான்றுகள் மனிதச் சிறப்பு அழகு, அன்பு, வலிமை ஆகியவற்றைப் புலப்படுத்தும் தன்மை மிக்கன. மனித உயர்வைப் புலப்படுத்தும் பண்பட்ட சிந்தனை வெளிப்பாடாக இவற்றைக் கருதமுடிகின்றது.

அழகியல்சார் உவம மரபுகள்

பொருத்தப்பாட்டு நோக்கிலும் புலன்சார் உணர்வுகளுக்கு மகிழ்வூட்டும் நோக்கிலும் மெய்ப்பாட்டுத் தன்மை வெளிப்பட அமையும் உவமைகளை அழகியல்சார் உவம மரபாக வரையறுத்துக் காணமுடிகின்றது.

ஒப்பில்லாத தன்மைகளைக் கொண்டு உவமை கூறக்கூடாது. ஒப்பிடும் பொருளும் ஒப்பிடப்படும் பொருளும் ஏதேனும் ஒரு பண்பில் ஒத்த தன்மையோடு இருக்க வேண்டும்.

*“உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்” (தொல்.உவமையியல், 281)*

உவமையைக் கேட்டு உலகத்தார் மகிழ வேண்டும் என்பார் பேராசிரியர். சு.பாலசுந்தரம் “ஒப்புமைகண்டு உவமை கூறுவது அறிவின் வெளிப்பாடு, வாசகருக்கு அதுவே எளிய புலப்பாடு ‘மயில்தோகை போலும் கூந்தல்’ என்று கூறவேண்டும். காக்கைச் சிறகன்ன கூந்தல் எனக் கூறக்கூடாது“ (2012: 310) என்பார். செங்காந்தள் போன்ற விரல் எனக் கூறலாம் ; செம்பருத்தி போன்ற விரல் எனக் கூறக் கூடாது. செங்காந்தள் விரலுக்கு வடிவ ஒப்புமை, செம்பருத்தியை விரல் வடிவத்தோடு ஒப்பிட்டால் நகைப்பே தோன்றும். உவமையைப் பெருமையாகவும் (மிகப்பெரிதாகவும்) சிறுமையாகவும் (மிகச்சிறியதாகவும்) மனக்குறிப்பினால் சுட்டலாம். கடல் போல் மக்கள் கூட்டம் எனும் உவமை எல்லையற்ற மக்கள் எண்ணிக்கையைப்

பெருந்தோற்றப்படுத்துகிறது. இன்றும் இவ்உவமை வழக்குப் பயன்பாட்டில் உள்ளது. கடுகு போல் உள்ளம் எனும் உவமை குறுகிய எண்ணம் படைத்தோரைக் காட்சிப்படுத்துகின்றது.

*“பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்*
*குறிப்பின் வரூஉம் நெறிப்பாடுடைய”* *(தொல். உவமையியல், 1231)*

பெருமை என்பது அளவில் பெரியதையும், சிறுமை என்பது அளவில் சிறியதையும் குறிக்கின்றது. மனக்குறிப்பினால் உணருமாறு சிறப்பித்து கூறுவதும் மரபாகும். ‘வானத்தைப் போல மனது’ ‘சீனப் பெருஞ்சுவர் போலச் சாலை’ ‘தீப்பெட்டி போல வீடு’ ‘சிறு தீ போலக் கண்கள்’ போன்ற உவமை மனதால் எண்ணி மகிழத்தக்கன. அளவில் பெரியதையும் அளவில் சிறியதையும் சுட்டும் உவமைகள் மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்கும், இவ் உவமைகள் உயர்வு நவிற்சி போல அமையும் என்கிறார் தமிழண்ணல்.

*“பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்*
*வழி மருங்கு அறியத் தோன்றும் என்ப”* *(தொல். உவமையியில்,1240)*

‘பேராற்று வெள்ளம் போலப் பேராசை’,
‘பெருந்திமிங்கலம் போல் படகு’,
‘பெரிய பானை போல வயிறு’,
‘சிறு குழந்தை போல் மனது’
‘சிறு விண்மீன் போல மின்மினிப்பூச்சி’,
‘சிறு மின்னல் போலத் தோன்றிய தீ’,

போன்ற உவமைகளை மெய்ப்பாட்டு உணர்வுடன் சுவைக்க முடிகின்றது. தொல்காப்பியர் காலத்திலும் இம்மரபு இருந்ததைப் பதிவு புலப்படுத்துகின்றது. ஒரு பொருளை ஒப்பிட ஒரு உவமை கூறினால் போதும். பல உவமைகளைக் கொண்டு அடுக்கி உவமை கூறக் கூடாது என்கிறது தொல்காப்பியம்.

*“அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே” (தொல். உவமையியல், 1257)*

வெண்மதி போலும் தும்மைப்பூ போலும், பால் போலும் கூட்டி என்றோ ஆப்பிள் போலும் கோவைப் பழம் போலும், அத்திப்பழம் போலும் சிவந்த பெண் என்றோ உவமை கூறக் கூடாது. இம்மரபு இன்றும் வழக்கில் இல்லை.

அழகியல் சார் உவம வழக்காறுகள்

மக்கள் வழக்கில் கூறும் வாய்மொழி மரபு உவமைகளை உணர்ந்தோ அறிந்தோ (மெய்ப்பாட்டு நிலை, அறிவு நிலை, அழகியல் உணர்நிலை) சுட்டுவதை அழகியல்சார் உவம வழக்காறாகக் கருதமுடிகின்றது.

தொல்காப்பியம் சில உவமைகளை உலக வழக்கோடு பொருந்தி அறிய வேண்டும் என்கிறது. தமிழண்ணல் ”உலக வழக்குப் பற்றிக் கேள்விப்பட்டோ அறிந்தோ உள்ளவர்க்கே பல உவமைகள் புலனாகும் என்றும் இது நனைத்துச் சுமப்பது
போன்ற காரியம் என்றால், இது பற்றிய உலக வழக்கு, அனுபவம் உள்ளவர்க்குத் தெளிவாக விளங்கும் ” (2021:432) என்கிறார்.

*“உவமப் பொருளை உணருங்காலை*
*மரீஇய மரபின் வழக்கொடு படுமே”* *(தொல்,உவமையியல், 1242)*

மரீஇய மரபு – மாறி வரும் மரபு. தாதுவருடத்துப் பஞ்சம் போல வறுமை, காக்கைக் குளியல் போலக் குளிக்கிறான் போன்றவை இதற்குச் சான்றாகும்

முடிவுரை

தொல்காப்பியரின் உவமைச் சிந்தனைகள் வாயிலாகப் பின்வரும் ஆய்வு முடிவுகளைக் கருத ஆய்வு இடம் தருகின்றது. தொல்காப்பியர் தன் கால சமூக மாந்தர் பயன்படுத்திய உவமைகளை உற்று நோக்கி உவமைக்கான இலக்கணத்தை வரையறை செய்திருப்பதாக எண்ண முடிகின்றது. உவமை குறித்த கட்டமைப்பைச் சமூகம், பண்பாடு, அழகியல் சார்ந்து வெளிப்படுத்துவதாகக் கருதமுடிகின்றது. இரட்டை நிலை அமைப்பில் (மரபு மற்றும் வழக்காறு) உவமைகள் அமைவதைத் தொல்காப்பிய வரையறையாகக் கொள்ளமுடிகின்றது. இந்த உவமை படைக்கப்படும் இரட்டை நிலை அமைப்பினை கருத்தாக்கம் (உயர்பொருள் கொண்டு உவமை படைத்தல்), கருத்தாக்க மீறல் (இழிவான பொருள் கொண்டு உவமை படைத்தல்) ஆகிய

*இருநிலைத் தன்மைகளிலும் நோக்க ஆய்வு வழிகோலுகின்றது. தொல்காப்பியர் சமூகம், சமூகம் சார்ந்த மக்கள் பண்பாடு, பண்பாட்டினை ஊடாடிய அழகியல் உணர்வு போன்றவற்றைச் சார்ந்து உவமைச் சிந்தனையை வளர்த்தெடுத்துள்ளதை ஆய்வு புலப்படுத்துகின்றது.*

*துணை நின்றவை*


1. *தமிழண்ணல் (உ.ஆ.) – தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், செல்லப்பா பதிப்பகம், மதுரை, ஆறாம் பதிப்பு, 2021.*
2. *பால சுந்தரம், ச. (உ.ஆ.) – தொல்காப்பியம் (தொகுதி-3, பகுதி-2) பொருளதிகாரம், பெரியார் பல்கலைக்கழக வெளியீடு, சேலம், முதற்பதிப்பு, 2012.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********